SELF STUDY TASK SHEET 2ND TERM -2021

කලාප අධ්‍යාපන කාර්යාලය - පොලොන්නරුව

வலயக் கல்விக் காரியாலயம் - பொலன்னறுவை

Zonal Education Office - Polonnaruwa

Tamil

Grade 04

01) கீழ்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக

யானை ஒன்று தனது இளம் கன்றுகள் இரண்டுடன் காட்டுப் பாதையொன்றால் சென்று கொண்டிருந்தது. கன்றுகள் ஓடியாடி மகிழ்ந்தபடி தாயின் பின்னே சென்று கொண்டிருந்தன. பகலவன் மேற்கே மறைந்து கொண்டிருந்தான். சூரிய ஒளிக்கதிர்கள் பட்டு காட்டருவி ஒன்று பளபள என மின்னியது.

1. யானையின் இளமைப் பெயர் என்ன? .....
2. பந்தியில் வந்துள்ள இணைமொழி எது? .....
3. சூரியன் என்பதைக் குறிக்கும் பந்தியிலுள்ள ஒத்தகருத்துச் சொல் யாது?

.....

4. இப்பந்தியிலுள்ள இரட்டைக் கிளவி எது? .....
5. "கன்றுகள் ஓடி ஆடி மகிழ்ந்தபடி தாயின் பின்னே சென்று கொண்டிருந்தன." இவ் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

.....

02) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஒரு மொழியைத் தருக.

1. மாலையில் கூடும் சந்தை - .....
2. சந்திரன் முழுமையாகத் தெரியும் நாள் - .....
3. ஒருவன் தன்னைப் பற்றி தானே எழுதும் நூள் - .....
4. ஐம்பதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா - .....
5. கோட்டையைச் சுற்றி அமைக்கும் நீர் நிலைகள் - .....

03) கீழ்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

.....

2. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.

.....

3. எட்டாக் கனிக்கு கொட்டாவி விடாதே.

.....

www.ikedu.lk

4. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

……

5. சிறு துளி பெரு வெள்ளம்.

……

04) கீழ்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியீடுகளை இடுக.

1. ஆகா எவ்வளவு சுவையான பழம்
2. உங்களுக்கு இது வேண்டுமா
3. உங்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளதா என ஆசிரியர் கேட்டார்
4. அதோ பாருங்கள் எவ்வளவு பெரிய அரண்மனை
5. பாலிலிருந்து தயிர் மோர் வெண்ணெய் நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்

05) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.

1. வந்தார் / வகுப்பிற்கு / அசிரியர் / விரைவாக

……

2. போட்டி / தமிழ்த்தினப் / பெற்றது / நிறைவு

……

3. ஆவான் / தளபாடங்கள் / தச்சன் / செய்பவன்

……

4. நாங்கள் / மைதானத்துக்குச் / பாடசாலை / சென்றோம்

……

5. உயர உயரப் / காற்றில் / பறந்தது / பட்டம்

……

www.ikedu.lk